செ.வெ.எண்: 515 நாள்: 19.08.2020

**தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் (ஐ.டி.ஐ) மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க** மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் அழைப்பு

**மாவட்ட** ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் தஞ்சாவூர், திருவையாறு, ஓரத்தநாடு அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 18 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் நிரப்பப்பட உள்ளன. மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் 2020-2021-ம் ஆண்டு பயிற்சியில் சேர, இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

www.skilltraining.tn.gov.inஎன்ற இணையதளம் வாயிலாக 10-ம் வகுப்பு, 8-ம் வகுப்பு, தேர்ச்சி பெற்ற மாணவர்கள் செப்டம்பர்-15-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். மதிப்பெண் அடிப்படையில் நடக்கும் இணையதள கலந்தாய்விற்கான தரவரிசைப் பட்டியல் மற்றும் கலந்தய்வு குறித்த விவரங்கள் கடைசி தேதிக்குப் பிறகு இதே இணையதளத்தில் வெளியிடப்படும்.

மேலும் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள தொழிற் பிரிவு விபரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம். விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் போது மாற்றுச் சான்றிதழ், ஜாதிச் சான்றிதழ், மற்றும் முன்னுரிமை கோருவதற்கான சான்றிதழ் (இருப்பின்) ஆகியவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும். ஐ.டி.ஐ.-யில் சேருவோருக்கு மாதந்தோரும் ரூ.500 உதவித்தொகை, விலையில்லா மடிக்கணினி, சைக்கிள், புத்தகம், காலணி, சீருடை, வரைபடக் கருவிகள் வழங்கப்படும்.

தொழில் நிறுவனங்களில் பயிற்சி வாய்ப்பும், வேலைவாய்ப்பும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விபரங்களுக்கு 04362-237054, 04362-262600, 04372-233442, 04362-278222 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.